# விசுவாசிகளின் அன்னையர்

கலாநிதி

## அமீன் பின் அப்தில்லாஹ் அஷ்ஷெகாவீ

தமிழில்

## எம். அஹ்மத் (அப்பாஸி)

மீள்பரிசீலனை

## எம். ஜே. எம். ரிஸ்மி (அப்பாஸி, M. A)

வெளியீடு

ரப்வா அழைப்பு நிலையம்

ரியாத் - ஸவூதி அரேபியா

# أمهات المؤمنين

# رضى الله عنهن

إعداد :

**الدكتور / أمين بن عبد الله الشقاوي**

ترجمة

**أحمد بن محمد**

مراجعة

**محمد رزمي محمد جنيد**

الناشر

المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالربوة

الرياض

المملكة العربية السعودية

بسم الله الرحمن الرحيم

## விசுவாசிகளின் அன்னையர்

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே. சாந்தியும் சமாதானமும் அவனது தூதர் (ஸல்) அவர்கள் மீதும், அவர்கள் குடும்பத்தார், தோழர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக. உண்மையான வணக்கத்திற்குத் தகுதியானவன் அல்லாஹ் மட்டுமே என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனின் அடியாரும் தூதருமாவார் என்றும் நான் சாட்சி பகர்கின்றேன்.

நபி (ஸல்) அவர்களின் மனைவியரான விசுவாசிகளின் அன்னையரை நேசிப்பதும், அவர்கள்தான் மறுமையிலும் நபியவர்களின் மனைவியர் என்று விசுவாசிப்பதும் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தினரின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்றாகும். கௌரவம், மகிமை, மதிப்பு, மரியாதை அனைத்திலும் நபியவர்களின் மனைவியர் எமக்கு அன்னையராக விளங்குகின்றனர். அது அவர்களுக்குரிய தனிச்சிறப்பாகும். இறைவன் பின்வருமாறு கூறுகின்றான் :

﴿ ٱلنَّبِيُّ أَوْلَىٰ بِٱلْمُؤْمِنِينَ مِنْ أَنفُسِهِمْ ۖ وَأَزْوَٰجُهُۥٓ أُمَّهَٰتُهُمْ ﴾ الأحزاب: ٦

பொருள் : "இந்த நபி மு..மின்களுக்கு அவர்களுடைய உயிர்களைவிட மேலானவராக இருக்கின்றார். இன்னும், அவருடைய மனைவியர் அவர்களுடைய தாய்மார்களாக இருக்கின்றனர்". (அல் அஹ்ஸாப் : 06).

ஷேஹுல் இஸ்லாம் இப்னுதைமியா (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பின் அவர்களை மறுமணம் செய்யக் கூடாதென்பதிலும், அவர்களை கண்ணியப்படுத்த வேண்டுமென்பதிலும் அனைத்து முஸ்லிம்களும் ஒரே கருத்தையே கொண்டுள்ளனர். கண்ணியத்திலும், திருமணம் செய்வது தடையென்பதிலும்தான் அவர்கள் அன்னையர்களே தவிர இரத்த பாசத்திலல்ல என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்"[1].

1. மின்ஹாஜுஸ்ஸுன்னா பாகம் 4 பக் 207.

அவர்களுக்கு சார்பாகப் பேசுவது, அவர்களுக்கெதிராக முன்வைக்கப்படும் வதந்திகளுக்கு மறுப்புக் கொடுப்பது, அவர்கள் ஈருலகிலும் நபியவர்களின் மனைவியர் என்ற காரணத்தால் பூமியிலுள்ள மனைவிமார்களில் அவர்களே மிகச்சிறந்த மனைவியர் என ஏற்றுக் கொள்வதன் மூலமும் எமது நேசத்தை நாம் வெளிப்படுத்த வேண்டும். இறைவன் கூறுகின்றான் :

﴿ ٱلَّذِينَ يَحۡمِلُونَ ٱلۡعَرۡشَ وَمَنۡ حَوۡلَهُۥ يُسَبِّحُونَ بِحَمۡدِ رَبِّهِمۡ وَيُؤۡمِنُونَ بِهِۦ وَيَسۡتَغۡفِرُونَ لِلَّذِينَ ءَامَنُواْ رَبَّنَا وَسِعۡتَ كُلَّ شَيۡءٖ رَّحۡمَةٗ وَعِلۡمٗا فَٱغۡفِرۡ لِلَّذِينَ تَابُواْ وَٱتَّبَعُواْ سَبِيلَكَ وَقِهِمۡ عَذَابَ ٱلۡجَحِيمِ ٧ رَبَّنَا وَأَدۡخِلۡهُمۡ جَنَّٰتِ عَدۡنٍ ٱلَّتِي وَعَدتَّهُمۡ وَمَن صَلَحَ مِنۡ ءَابَآئِهِمۡ وَأَزۡوَٰجِهِمۡ وَذُرِّيَّٰتِهِمۡۚ إِنَّكَ أَنتَ ٱلۡعَزِيزُ ٱلۡحَكِيمُ ﴾ غافر: ٧ - ٨

பொருள் : அர்ஷை சுமந்து கொண்டிருப்பவர்களும், அதைச் சற்றியுள்ளவர்களும் தங்கள் இறைவனின் புகழைக் கொண்டு அவனைத் தஸ்பீஹு செய்து கொண்டு இருக்கிறார்கள். அவன் மேல் ஈமான் கொண்டவர்களாக மற்ற ஈமான் கொண்டவர்களுக்காக மன்னிப்புக் கோருகின்றனர். “எங்கள் இறைவனே! நீ அருளாலும், ஞானத்தாலும், எல்லாப் பொருட்களையும் சூழந்து இருக்கிறாய்! எனவே, பாவமீட்சி கோரி, உன் வழியைப் பின்பற்றுபவர்களுக்கு, நீ மன்னிப்பளிப்பாயாக. இன்னும் அவர்களை நரக வேதனையிலிருந்தும் காத்தருள்வாயாக!. “எங்கள் இறைவனே! நீ அவர்களுக்கு வாக்களித்திருக்கும், நிலையான சுவர்க்கத்தில், அவர்களையும், அவர்கள் மூதாதையர்களிலும், அவர்கள் மனைவியர்களிலும், அவர்கள் சந்ததியார்களிலும் நன்மை செய்தோரையும் பிரவேசிக்கச் செய்வாயாக. நிச்சயமாக நீ தான் (யாவரையும்) மிகைத்தவன் ஞானம் மிக்கவன்”. (மு∴மின் : 7,8).

சுவனம் சென்ற பின்னரும் கணவன் - மனைவி என்ற உறவுமுறை இருப்பதாக இவ்வசனம் உறுதிப்படுத்துகின்றது. இதன் மூலம் இவ்வுலகில் கணவன் - மனைவியாக இருந்து இருவரும் சுவனம் நுழைந்தால் மறுமையிலும் அதே தம்பதியினர் கணவன் - மனைவியாகவே இருப்பார்கள் என்பது தெளிவாகின்றது[1].

1. அஷ்ஷேஹ் முஹம்மத் அல்உஸைமீன் (ரஹ்) அவர்கள் எழுதிய “அல்அகீததுல் வாஸிதிய்யா” என்ற நூலின் விரிவுரை பாகம் : 2, பக்கம் : 278).

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “ஒரு பெண் (மறுமையில்) தன்னுடன் இறுதியாக வாழ்ந்த கணவனுக்குச் உரித்தாவாள்”[1].

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் அறிவிக்கும் மற்றுமொரு நபிமொழியில் “என்னிடம் இறைத்தூதர்(ஸல்) அவர்கள், “இரண்டு முறை உன்னை நான் கனவில் கண்டுள்ளேன். ஒரு வானவர் உன்னைப் பட்டுத் துணியொன்றில் எடுத்துச் செல்கிறார். அப்போது அவர், “இவர் உங்கள் (வருங்கால) மனைவி” என்று கூறினார். உடனே நான் அந்தப் பட்டுத் துணியை விலக்கிப் பார்த்தேன். அதில் இருந்தது நீதான். அப்போது நான் (என் மனத்திற்குள்) “இக்கனவு அல்லாஹ்வின் தரப்பிலிருந்து வந்ததாயின், இதனை அல்லாஹ் நனவாக்குவான்” என்று சொல்லிக்கொண்டேன்”[2]. அதே நபிமொழியின் தீர்மிதீ (3880) அறிவிப்பில் : “இவர்கள்தான் ஈருலகிலும் உங்களுடைய மனைவி” என்று நபியவர்களிடம் கூறப்பட்டது.

**உம்மஹாதுல் மு.ஃ.மினீன்களின் (விசுவாசிகளின் அன்னையர்) சிறப்புக்கள் :**

1. இமாம் இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : “நபியுடைய மனைவியர், அல்லாஹ்வின் அர்ஷுக்கு மிக நெருக்கமான, சுவனத்தின் அதியுயர் பதவியில், அனைத்துப் படைப்பினங்களுக்கும் மேலால் நபியுடன் இருப்பார்கள்”[3].

2. இறைவன் நபியுடைய மனைவியர்க்கு, உலக ஆடம்பர வாழ்கையை விரும்புவோர் நபியை விட்டுவிட்டு, அவ்வாறான வாழ்கை கிடைக்கக் கூடிய வேறு கணவரைத் தெரிவு செய்யுங்கள், அல்லது நபியவர்களுடைய எளிமையான வாழ்கையைப் பொறுத்துக் கொண்டு அவர்களுடனேயே வாழுங்கள். அவ்வாறு வாழ்ந்தால் அல்லாஹ்விடத்தில் மகத்தான கூலியுள்ளது. இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யும்படி ஏவுமாறு நபியவர்களைப் பணித்தான். அவர்கள் அல்லாஹ்வையும், அவனது தூதரையும், மறுமையையும் தெரிவு செய்தார்கள். அதனால் அல்லாஹ் அவர்களுக்கு ஈருலக

1. (அறிவிப்பவர் : அபுத்தர்தா.ஃ. (ரலி), நூல் : இமாம் தபரானி எழுதிய “அல்மு.ஃ.ஜமுல் ஔஸத்” பாகம் : 3, பக்கம் : 275, ஹதீஸ் இல : 3130. அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் தனது “அஸ்ஸில்ஸலா அஸ்ஸஹீஹா” என்ற நூலில் (ஹதீஸ் இல : 1281) இச்செய்தியை பலப்படுத்தியுள்ளார்கள்.
2. புஹாரி (5125) மற்றும் முஸ்லிம் (2438).
3. தப்ஸீர் இப்னு கஸீர் பாகம் : 11, பக்கம் : 150

சிறப்புக்களையும் ஒன்று சேர்த்துக் கொடுத்தான். அல்குர்ஆனில் இச்செய்தி பின்வருமாறு இடம்பெறுகின்றது :

﴿ يَٰٓأَيُّهَا ٱلنَّبِيُّ قُل لِّأَزْوَٰجِكَ إِن كُنتُنَّ تُرِدْنَ ٱلْحَيَوٰةَ ٱلدُّنْيَا وَزِينَتَهَا فَتَعَالَيْنَ أُمَتِّعْكُنَّ وَأُسَرِّحْكُنَّ سَرَاحًا جَمِيلًا ﴿٢٨﴾

وَإِن كُنتُنَّ تُرِدْنَ ٱللَّهَ وَرَسُولَهُۥ وَٱلدَّارَ ٱلْءَاخِرَةَ فَإِنَّ ٱللَّهَ أَعَدَّ لِلْمُحْسِنَٰتِ مِنكُنَّ أَجْرًا عَظِيمًا ﴾ الأحزاب: ٢٨ - ٢٩

பொருள் : “நபியே! உம்முடைய மனைவிகளிடம், “நீங்கள் இவ்வுலக வாழ்க்கையையும், இதன் அலங்காரத்தையும் நாடுவீர்களானால், வாருங்கள்! நான் உங்களுக்கு வாழ்க்கைக்கு உரியதைக் கொடுத்து அழகிய முறையில் உங்களை விடுதலை செய்கிறேன். ஆனால், நீங்கள் அல்லாஹ்வையும், அவன் தூதரையும், மறுமையின் வீட்டையும் விரும்புவீர்களானால், அப்பொழுது உங்களில் நன்மையாளர்களுக்காக அல்லாஹ் மகத்தான நற்கூலி நிச்சயமாக தயார் செய்திருக்கிறான்” என்றும் கூறுவீராக!”. (அல் அஹ்ஸாப் : 28,29).

3. அவர்களுக்கு இரட்டிப்பு நன்மைகள் வழங்கப்படும். அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் :

﴿ وَمَن يَقْنُتْ مِنكُنَّ لِلَّهِ وَرَسُولِهِۦ وَتَعْمَلْ صَٰلِحًا نُّؤْتِهَآ أَجْرَهَا مَرَّتَيْنِ وَأَعْتَدْنَا لَهَا رِزْقًا كَرِيمًا ﴾ الأحزاب: ٣١

பொருள் : “அன்றியும் உங்களில் எவர் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிபட்டு, நற்காரியம் செய்கிறாரோ, அவருக்கு நாம் நற்கூலியை இருமுறை வழங்குவோம் இன்னும் அவருக்கு கண்ணியமான உணவையும் தயார் செய்திருக்கிறோம்”. (அல் அஹ்ஸாப் : 31). நபியவர்களின் மனைவியர் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் வழிப்பட்டு, நல்லரங்கள் செய்து, அதன் மூலம் இரட்டிப்பு நன்மைகளைப் பெற்றுக் கொண்டனர். ஸமக்ஃஷரீ என்ற அல்குர்ஆன் விரிவுரையாளர் பின்வருமாறு கூறியுள்ளார் : “நபியவர்களுடைய மனைவியருக்கிருக்கும் சிறப்பைப் போன்று வேறு எந்தப் பெண்களுக்கும் கிடையாது. அவர்களுக்கு அல்லாஹ்விடம் இருக்கும் அருட்கொடைகளைப் போன்று வேறு யாருக்கும் கிடையாது. செயற்பாடுகளுக்கு ஏற்ற விதத்திலேயே கூலிகளும் அமையும். அவர்களுடைய நன்மைகள் இரட்டிப்பாக்கப்படக் காரணம் என்னவெனில், நற்குணம், அழகிய குடும்ப வாழ்கை, போதுமென்ற மனப்பாங்கு, இறையச்சம், வணக்கத்தின்பால் தமது

கவனத்தை செலுத்தல் போன்றவற்றின் மூலம் நபியவர்களின் பொருத்தத்தை அம்மனைவியர் தேடிக்கொண்டதனாலேயே இவ்வாறு இரு மடங்கு கூலிகள் வழங்கப்படுகின்றன”[1].

4. அல்லாஹ் பின்வருமாறு தனது திருமறையில் கூறுகின்றான் :

﴿ يَٰنِسَآءَ ٱلنَّبِيِّ لَسۡتُنَّ كَأَحَدٖ مِّنَ ٱلنِّسَآءِ إِنِ ٱتَّقَيۡتُنَّۚ فَلَا تَخۡضَعۡنَ بِٱلۡقَوۡلِ فَيَطۡمَعَ ٱلَّذِي فِي قَلۡبِهِۦ مَرَضٞ وَقُلۡنَ قَوۡلٗا مَّعۡرُوفٗا

﴾ الأحزاب: ٣٢

பொருள் : “நபியின் மனைவிகளே! நீங்கள் பெண்களில் மற்றப் பெண்களைப் போலல்ல, நீங்கள் இறையச்சத்தோடு இருக்க விரும்பினால், (அந்நியருடன் நடத்தும்) பேச்சில் நளினம் காட்டாதீர்கள். ஏனெனில் எவன் உள்ளத்தில் நோய் (தவறான நோக்கம்) இருக்கின்றதோ, அ(த்தகைய)வன் ஆசை கொள்வான். இன்னும் நீங்கள் நல்ல பேச்சே பேசுங்கள்”. (அல் அஹ்ஸாப் : 32). இமாம் இப்னு கஸீர் (ரஹ்) கூறுகின்றார்கள் : “இவை அல்லாஹ் நபியுடைய மனைவியர்க்கு கடைபிடிக்குமாறு ஏவிய சில ஒழுக்கங்களாகும். இதில் ஏனைய பெண்களும் அடங்குவர். அவர்களைப் பார்த்து அல்லாஹ், அவர்கள் அவன் ஏவிய பிரகாரம் இறையச்சத்துடன் இருந்தால் வேறு எந்தப் பெண்களும் இவர்களுக்கு நிகராகவோ, இவர்களுடைய பதவியை அடைந்து கொள்ளவோ முடியாது என்று கூறுகின்றான்”[2].

5. அல்லாஹ் இப்பெண்களை நபி (ஸல்) அவர்களுக்கென்றே தேர்ந்தெடுத்துள்ளான். அன்னலாருக்குப் பிறகு ஏனையோர் இவர்களை மறுமணம் செய்வதை முற்றாகத் தடை செய்துள்ளான். அதனை இறைவன் பின்வருமாறு கூறுகின்றான் :

﴿ وَمَا كَانَ لَكُمۡ أَن تُؤۡذُواْ رَسُولَ ٱللَّهِ وَلَآ أَن تَنكِحُوٓاْ أَزۡوَٰجَهُۥ مِنۢ بَعۡدِهِۦٓ أَبَدًاۚ إِنَّ ذَٰلِكُمۡ كَانَ عِندَ ٱللَّهِ عَظِيمًا

﴾ الأحزاب: ٥٣

பொருள் : “அல்லாஹ்வின் தூதரை நோவினை செய்வது உங்களுக்கு தகுமானதல்ல, அன்றியும் அவருடைய மனைவிகளை அவருக்குப் பின்னர் நீங்கள் மணப்பது ஒருபோதும் கூடாது,

1. அல்கஷ்ஷாப் பாகம் : 5, பக்கம் : 65.
2. தப்ஸீர் இப்னு கஸீர், பாகம் 11, பக்கம் 150.

நிச்சயமாக இது அல்லாஹ்விடத்தில் மிகப்பெரும் (பாவ) காரியமாகும். (அல் அஹ்ஸாப் : 53).

6. இறைவனுடைய செய்திகள் (வஹீ) இவர்களின் வீட்டிலேயே இறங்குகின்றன. இறைவன் கூறுகின்றான் :

﴿ وَقَرْنَ فِي بُيُوتِكُنَّ وَلَا تَبَرَّجْنَ تَبَرُّجَ الْجَاهِلِيَّةِ الْأُولَىٰ ۖ وَأَقِمْنَ الصَّلَاةَ وَآتِينَ الزَّكَاةَ وَأَطِعْنَ اللَّهَ وَرَسُولَهُ ۚ
إِنَّمَا يُرِيدُ اللَّهُ لِيُذْهِبَ عَنكُمُ الرِّجْسَ أَهْلَ الْبَيْتِ وَيُطَهِّرَكُمْ تَطْهِيرًا ﴾ الأحزاب: ٣٣

பொருள் : "(நபியின் மனைவிகளே!) நீங்கள் உங்கள் வீடுகளிலேயே தங்கியிருங்கள். முன்னர் அஞ்ஞான காலத்தில் (பெண்கள்) திரிந்து கொண்டிருந்ததைப் போல் நீங்கள் திரியாதீர்கள். தொழுகையை முறைப்படி உறுதியுடன் கடைப்பிடித்து தொழுங்கள். ஸகாத்தும் கொடுத்து வாருங்கள். அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள். (நபியின்) வீட்டையுடையவர்களே! உங்களை விட்டும் அசுத்தங்களை நீக்கி, உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கி விடவே அல்லாஹ் நாடுகிறான்". (அல் அஹ்ஸாப் : 33).

இமாம் இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் கூறினார்கள் : "(நபியின்) வீட்டையுடையவர்களே! உங்களை விட்டும் அசுத்தங்களை நீக்கி, உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கிவிடவே அல்லாஹ் நாடுகிறான்" என்ற வசனத்தில் நபியுடைய மனைவியரும் உட்படுவார்கள் என்பதில் அல்குர்ஆனை ஆராயும் யாரும் ஐயப்படமாட்டார்கள். ஏனெனில் மேற்கண்ட வசனத் தொடர்கள் அவர்களைப்பற்றியே பேசிக் கொண்டிருக்கின்றன. அதனால்தான் இவ்வசனங்களைத் தொடர்ந்து பின்வருமாறு கூறப்பட்டுள்ளது :

﴿ وَاذْكُرْنَ مَا يُتْلَىٰ فِي بُيُوتِكُنَّ مِنْ آيَاتِ اللَّهِ وَالْحِكْمَةِ ﴾ الأحزاب: ٣٤

பொருள் : "மேலும் உங்களுடைய வீடுகளில் ஓதப்படுகின்றனவே அல்லாஹ்வின் வசனங்கள் (அவற்றையும்) ஞான விஷயங்களையும் (ஹிக்மத்) நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்". (அல்அஹ்ஸாப் : 34). அதாவது உங்களுடைய வீடுகளிலே இறைத்தூதருக்கு அல்லாஹ் அருளிய வேதம் மற்றும் நபிமொழிகளை அமுல்படுத்துங்கள். ஏனைய மக்களுக்கு மத்தியில் வஹீயானது உங்கள் வீடுகளிலே இறங்குகின்றது என்ற சிறப்பம்சத்தை நினைவிலிருத்திக் கொள்ளுங்கள். இவ்வருட்கொடைக்கு மிகவும்

தகுதியானவர் அன்னை ஆஇஷா (ரலி) அவர்களே. இவ்வருளை முழுமையாகப் பெற்றுக் கொண்டவர் இவ்வன்னையர்தான். ஏனெனில் நபியவர்கள் குறிப்பிட்டதுபோன்று அவர்களுடைய மனைவியரில் அன்னை ஆஇஷா (ரலி) அவர்களுடன் இருக்கும்போது மாத்திரம்தான் அவர்களுக்கு வஹீ அருளப்பட்டது. ஏனைய மனைவியருடன் இருக்கும்போது அவ்வாறு இறங்கவில்லை[1].

**நபியவர்களின் மனைவியர் :**

1. & 2. **கதீஜா (ரலி) மற்றும் ஆஇஷா (ரலி) :**

நபியவர்களின் மனைவியரில் மிகச்சிறந்தவர்கள் : கதீஜா (ரலி) மற்றும் ஆஇஷா (ரலி) ஆகியோராவர். கதீஜா (ரலி) அவர்கள்தான் முதலில் நபியவர்களை விசுவாசித்து இஸ்லாத்தில் இணைந்தவர். ஷேஹுல் இஸ்லாம் இப்னுதைமியா (ரஹ்) அவர்கள் கூறினார்கள் : "அனைவரின் ஒருமித்த கருத்தின் பிரகாரம் நபியவர்களை முதலில் ஏற்றுக் கொண்டோர் நால்வர் : ஆண்களில் முதலில் ஏற்றவர் அபூபக்ர் (ரலி), பெண்களில் அன்னை கதீஜா (ரலி), சிறுவர்களில் அலீ (ரலி), அடிமைகளில் ஸைத் பின் ஹாரிஸ் (ரலி) ஆகியோராவர். இஸ்லாமிய அழைப்புப் பணிக்கு அதிக பங்களிப்புச் செய்தவர் அபூபக்ர் (ரலி), பின்பு கதீஜா (ரலி) என்பது அனைவரினதும் ஒருமித்த கருத்தாகும்"[2].

கதீஜா (ரலி) அவர்களின் சிறப்புப் பற்றி அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவித்துள்ள நபிமொழியில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது : "(ஒரு முறை) நபி(ஸல்) அவர்களிடம் (வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்கள் வந்தார்கள். "இறைத்தூதர் அவர்களே! இதோ, கதீஜா தம்முடன் ஒரு பாத்திரத்தில் குழம்பு, அல்லது உணவு, அல்லது பானம் எடுத்துக் கொண்டு உங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறார். அவர் உங்களிடம் வந்தவுடன் அவருக்கு அவரின் இறைவனின் தரப்பிலிருந்தும் என் தரப்பிலிருந்தும் ஸலாம் கூறி அவருக்கு சொர்க்கத்தில் கூச்சல் குழப்பமோ, களைப்போ காண முடியாத முத்து மாளிகை ஒன்று தரப்படவிருப்பதாக நற்செய்தி சொல்லுங்கள்" என்று கூறினார்கள்"[3].

1. தப்ஸீர் இப்னு கஸீர், பாகம் : 11, பக்கம் : 160.
2. மின்ஹாஜுஸ்ஸுன்னா, பாகம் 7, பக்கம் 15
3. புஹாரி (3820), மற்றும் முஸ்லிம் (2432).

அன்னை ஆஇஷா (ரலி) அவர்களைப் பொருத்தமட்டில், நபியவர்களுடைய மனைவியரில் அவர்களுக்கு மிகவும் விருப்பத்திற்குரியவராகவும், அம்மனைவியரில் மிக அறிவாளியாகவும், முஸ்லிம்கள் மத்தியில் மிகவும் மரியாதைக்கு உரியவராகவும் இருந்தார்கள். அவர்கள் பற்றி நபியவர்களைத் தொட்டும் அபூ மூஸா (ரலி) அவர்கள் அறிவிக்கும் பொன்மொழியில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: “ஆண்களில் நிறையப் பேர் முழுமை பெற்றிருக்கிறார்கள். ஆனால், பெண்களில் இம்ரானின் மகள் மர்யமையும், ஃபிர்அவ்னின் மனைவி ஆஸியாவையும் தவிர வேறெவரும் முழுமை பெறவில்லை. (உலகின் மற்ற) பெண்களை விட ஆயிஷாவுக்கு இருக்கும் சிறப்பு (மற்ற) எல்லா உணவுகளைக் காட்டிலும் “ஸரீத்” என்னும் உணவுக்கு இருக்கும் சிறப்பைப் போன்றதாகும்”[1]. “ஸரீத்” என்பது இறைச்சி மற்றும் உரொட்டி கலந்து செய்யப்படும் ஒருவகை உணவு. இது நபியவர்களின் காலத்தில் மிகச் சிறந்த உணவாகக் கருதப்பட்டது.

### 3. ஸௌதா பின்த் ஸம்ஆ (ரலி) :

நபியவர்கள் அன்னை ஆஇஷா (ரலி) அவர்களை அதிகம் நேசிப்பதைப் புரிந்துகொண்டு தனக்குரிய நாளையும் சேர்த்து ஆஇஷா (ரலி) அவர்களுக்கு வழங்கியது இவர்களுடைய சிறப்புக்களில் ஒன்று. அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : இன்னாராக நான் இருக்க வேண்டுமே என்று நான் யாரைப் பார்த்தும் ஆசைப்பட்டதில்லை, ஸௌதா பின்த் ஸம்ஆவைத் தவிர. அவரிடமிருந்த திடகாத்திரத்தின் காரணமாக அப்பெண்ணாக நான் இருக்க வேண்டுமே என்று ஆசைப்பட்டேன். அவர்கள் வயது முதிர்ந்ததும் அவர்களுக்குரிய தினத்தை ஆஇஷா (ரலி) அவர்களுக்கு வழங்கி, அல்லாஹ்வின் தூதரே! உங்களிடம் எனக்கிருந்த தினத்தை நான் ஆஇஷாவுக்கு விட்டுக் கொடுத்து விட்டேன். (அதன் பின்) நபி (ஸல்) அவர்கள் ஸௌதா(ரலி) உடைய தினத்தையும் சேர்த்து அன்னை ஆஇஷாவுக்கு இரு தினங்களைப் பகிர்ந்தளித்தார்கள்[2].

### 4. ஹப்ஸா பின்து உமர் (ரலி) :

---

1. புஹாரி (3769), மற்றும் முஸ்லிம் (2431).
2. புஹாரி (5212), முஸ்லிம் (1463), இவ்வார்த்தை முஸ்லிமிலிருந்து பெறப்பட்டது.

இரண்டாம் கலீபா உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் புதல்வியாகிய இவர்கள் மக்காவிலுள்ள குரைஷ் கோத்திரத்தில் பனூ அதிய் குடும்பத்தைச் சேர்ந்தவர். அல்குர்ஆனைத் திறன்பட ஓதக்கூடிய, எழுதத் தெரிந்த குறிப்பிட்ட சிலரில் இவர்களும் ஒருவராகத் திகழ்ந்தது இவருடைய சிறப்புக்களிலுள்ளது. அஷ்ஷிபா பின்து அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹப்ஸா (ரலி) இடம் இருக்கும் போது நபி (ஸல்) அவர்கள் வந்தார்கள். அப்போது என்னிடம் : “இவருக்கு (ஹப்ஸாவுக்கு) எழுதக் கற்றுக் கொடுத்தது போன்று “அந்நம்லா” (இரு விலாப் பகுதிகளிலும் வரக்கூடிய ஒருவகைப் புண்) என்ற நோய்க்குரிய மந்திரத்தையும் கற்றுக் கொடுக்கக் கூடாதா?” எனக் கூறினார்கள்[1]. (நூல் :

நபியவர்களிடமிருந்து பல பொன்மொழிகளை இவர்கள் அறிவித்துள்ளார்கள். உஸ்மான் (ரலி) அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அனைத்து முஸ்லிம்களும் ஒன்றுபட்ட அல்குர்ஆன் மூலப்பிரதி இவர்களுடைய வீட்டிலேயே இருந்தது. அதிகமாக நோன்பு வைப்பவராக இவர்கள் மக்களிடத்தில் பிரபலமானார்கள். “ஹப்ஸா (ரலி) அவர்கள் மரணமாகும் வரை நோன்பு நோற்றார்கள்” என்று நாபி.ஃ. (ரஹ்) அறிவிக்கும் செய்தியை இமாம் இப்னு ஸ.ஃ.த் (ரஹ்) தனது “தபகாதுல் குப்ரா” எனும் நூலில் பதிந்துள்ளார்கள். (பாகம் 8, பக்கம்: 287). இதன் அறிவிப்பாளர் வரிசை வலுவானதென ஹாபிழ் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் தனது அல்இஸாபா எனும் நூலில் கூறியுள்ளார்கள். (பாகம் : 13, பக்கம் 287).

**5. ஸைனப் பின்து கு.ஃ.ஸைமா (ரலி) :**

பனூ ஹிலால் குடும்பத்தைச் சேர்ந்த இவர்கள் நபியவர்களுடன் சில மாதங்களே வாழ்தார்கள். அதன்பின் மரணித்து விட்டார்கள். இதனால் அவர்கள் பற்றிய பல தகவல்கள் கிடைக்காமல் போயின. இமாம் இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் இந்த ஸைனப் (ரலி) அவர்களுக்கு “உம்முல் மஸாகீன்” (ஏழைகளின் தாய்) என்ற சிறப்புப் பெயருள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். ஏழைகளுக்கு அதிகமாக தர்மம் செய்து, அவர்களுக்கு அன்பு காட்டி, உபகாரம்

1. அபூ தாவூத் (3887). அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் தனது “அஸ்ஸில்ஸலா அஸ்ஸஹீஹா” என்ற நூலில் (ஹதீஸ் இல: 178) இச்செய்தியை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள்.

செய்ததால்தான் இவர்களுக்கு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள்(1).

## 6. உம்மு ஸலமா (ரலி) :

குரைஷிக் கோத்திரத்தைச் சேர்ந்த ஹின்து பின்து அபீ உமைய்யா ஸுஹைல் பின் மு.ீரா (ரலி) என்ற இவ்வன்னையார் உம்மு ஸலமா என்ற புனைப் பெயர் மூலமே அறியப்பட்டுள்ளார்கள். தனது முதற்கணவருடன் ஹபஷா (எத்தியோப்பியா), அதன் பின் மதீனா ஆகிய இடங்களுக்கு ஹிஜ்ரத் செய்தது இவர்களுடைய சிறப்பம்சங்களிலுள்ளதாகும். நபியவர்களிடமிருந்து பல பொன்மொழிகளை அறிவித்த இவர்கள், மார்க்க சட்டக்கலையில் தேர்ந்தவராகவும், பல நபிமொழிகளை மனனம் செய்தவராகவும் இருந்தார்கள். “அல் முரைஸீ.”, “கை.பர்”, மக்கா வெற்றி போன்ற யுத்தங்களில் நபியவர்களுடன் இவரும் கூடவே செல்லும் பாக்கியத்தைப் பெற்றார்கள்.

ஹுதைபியா உடன்படிக்கையில் இவர்களின் நிலைப்பாடு யாராலும் மறக்க முடியாத ஒன்று. மக்கத்து குரைஷிகளுக்கும் நபி (ஸல்) அவர்களுக்குமிடையில் இடம்பெற்ற உடன் படிக்கையைத் தொடர்ந்து நபியவர்கள் தனது தோழர்களுக்கு “எழுந்து சென்று, கொண்டுவந்த பிராணிகளை அறுத்துப் பலியிட்டுவிட்டு முடிகளை சிரைத்துக் கொள்ளுங்கள்” என்றார்கள். அவ்வாறு மூன்று தடவைகள் கூறியும் யாரும் அதனை நிறைவேற்ற முற்படவில்லை. அப்போது நபியவர்கள் அன்னை உம்மு ஸலமாவிடம் சென்று மக்கள் தனது கட்டளைக்கு பதிலளிக்காததைக் கூறினார்கள். அப்போது அன்னையவர்கள் : அல்லாஹ்வின் தூதரே! மக்கள் பதிலளிக்க வேண்டுமென்று விரும்புகிறீரா? நீங்கள் யாருடனும் பேசாமல், வெளியே சென்று, அனைவர் முன்னிலையிலும் உங்களது ஒட்டகங்களைப் பலியிட்டுவிட்டு, முடி சிரைக்கக் கூடியவரை அழைத்து உமது முடியை சிரைத்து விடுங்கள். அதுவரை யாருடனும் பேச வேண்டாம்” என்றார்கள். நபியவர்கள் அவ்வாறே செய்ததும், மக்கள் எழுந்து பிராணிகளை அறுத்துப் பிலியிட அரம்பித்தார்கள். அதன்பின் ஒருவருக்கொருவர் முடிகளை சிரைத்துக் கொண்டார்கள்(2).

## 7. ஸைனப் பின்து ஜஹ்ஷ் (ரலி) :

1. அல் பிதாயா வந்நிஹாயா பாகம் : 5, பக்கம் 581.
2. புஹாரி 2731, 2732.

இவர்கள் நபியவர்களின் மாமிமகளாவார். “உங்களை உங்களது குடும்பத்தினர் நபியவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். ஆனால் என்னை ஏழு வானங்களுக்கு மேலிருந்து அல்லாஹ் திருமணம் செய்து வைத்தான்” என்று கூறி ஏனைய மனைவியருக்கு மத்தியில் பெருமைப் பட்டுக்கொள்வார்கள்[1]. அல்லாஹ்வே இவர்களின் திருமணத்தில் (பெண் தரப்பில்) பொறுப்பதாரியாக இருந்தது இவர்களுடைய சிறப்பம்சங்களில் ஒன்றாகும். ஆரம்பத்தில் இவர்கள் நபியவர்களுடைய வளர்ப்பு மகனாகிய ஸைத் பின் ஹாரிஸ் (ரலி) அவர்களின் மனைவியாக இருந்தார்கள். வளர்ப்பு மகனின் மனைவியைத் திருமணம் செய்யும் விடயத்தில் இஸ்லாமிய சமூகம் நபிவர்களைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காக, ஸைத் (ரலி) அவர்கள் அன்னையரை விவாகரத்துச் செய்ததும் அல்லாஹ்வே முன்நின்று வஹீ மூலம் இத்திருமணத்தை நடத்திவைத்தான். அதுபற்றி இறைவன் பின்வருமாறு கூறுகின்றான் :

﴿ وَإِذْ تَقُولُ لِلَّذِىٓ أَنْعَمَ ٱللَّهُ عَلَيْهِ وَأَنْعَمْتَ عَلَيْهِ أَمْسِكْ عَلَيْكَ زَوْجَكَ وَٱتَّقِ ٱللَّهَ وَتُخْفِى فِى نَفْسِكَ مَا ٱللَّهُ مُبْدِيهِ وَتَخْشَى ٱلنَّاسَ وَٱللَّهُ أَحَقُّ أَن تَخْشَىٰهُ ۖ فَلَمَّا قَضَىٰ زَيْدٌ مِّنْهَا وَطَرًا زَوَّجْنَٰكَهَا ﴾ الأحزاب: ٣٧

பொருள் : “(நபியே!) எவருக்கு அல்லாஹ்வும் அருள் புரிந்து, நீரும் அவர் மீது அருள் புரிந்தீரோ, அவரிடத்தில் நீர் “அல்லாஹ்வுக்குப் பயந்து நீர் உம் மனைவியை (விவாகரத்துச் செய்து விடாமல்) உம்மிடமே நிறுத்தி வைத்துக் கொள்ளும்” என்று சொன்ன போது அல்லாஹ் வெளியாக்க இருந்ததை, மனிதர்களுக்குப் பயந்து நீர் உம்முடைய மனத்தில் மறைத்து வைத்திருந்தீர். ஆனால் அல்லாஹ் அவன்தான், நீர் பயப்படுவதற்குத் தகுதியுடையவன். ஆகவே ஜைது அவளை விவாகரத்துச் செய்துவிட்ட பின்னர் நாம் அவளை உமக்குத் திருமணம் செய்வித்தோம்”. (அல் அஹ்ஸாப் : 37). அக்காலத்து மக்களிடத்தில் வளர்ப்பு மகனை சொந்த மகனாகப் பார்க்கும் வழமை இருந்ததால், இவ்வாறு ஸைனபைத் திருமணம் செய்து கொண்டால் மக்கள் இதற்கெதிராகக் குரல்கொடுக்க ஆரம்பித்து விடுவார்கள் என்ற பயத்தையே நபியவர்கள் மறைத்துக் கொண்டிருந்தார்கள். அச்சந்தர்ப்பத்தில் தான், ஸைத் (ரலி) அவர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்திசெய்து, விவாகரத்துப் பெற்றுக் கொடுக்குமாறும், அன்னையரை நபியவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கத் தான் பொறுப்பு

1. புஹாரி 7421.

நிற்பதாகவும் அல்லாஹ் வஹீ அறிவித்தான்[1]. பின்பு அவ்வசனத்தின் இறுதியில்: “(இது) நடைபெற்றே தீர வேண்டிய அல்லாஹ்வின் கட்டளையாகும்” என்று கூறியுள்ளான்.

**8. ஜுவைரியா பின்துல் ஹாரிஸ் (ரலி) :**

“பனுல்முஸ்தலக்” அல்லது “அல் முரைஸீ.ஃ.” என்றழைக்கப்படும் போரில் கைதியாகப் பிடிக்கப்பட்ட அன்னை ஜுவைரியாவை நபியவர்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, அதனையே மஹர்த்தொகையாக வைத்துத் திருமணம் செய்து கொண்டார்கள். பரகத் செய்யப்பட்ட ஒரு பெண்ணாக இருந்தது இவர்களுடைய சிறப்பம்சங்களில் ஒன்றாகும். அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : தனது சமூகத்திற்கு இவர்களைக் காண அதிக பரகத் செய்யப்பட்ட ஒரு பெண்ணை நாங்கள் காணவில்லை. இவர்களின் காரணமாக பனுல் முஸ்தலக் குடும்பத்திலிருந்து சுமார் நூறு நபர்கள் விடுவிக்கப்பட்டார்கள்[(2)].

இவர்கள் அதிகம் அல்லாஹ்வை நினைவுகூரக் கூடியவராகவும், நோன்பு பிடிப்பவராகவும் இருந்தார்கள். அன்னை ஜுவைரியா அவர்கள் கூறுகின்றார்கள் : “ஒரு வெள்ளிக்கிழமையில் நான் நோன்பு பிடித்திருந்த நிலையில் நபியவர்கள் என் வீட்டுக்கு வந்தார்கள். “நீர் நேற்று நோன்பு பிடித்தீரா?” என வினவினார்கள். நான் “இல்லை” என்றேன். “நாளை பிடிப்பீரா?” எனக் கேட்டார்கள். நான் “இல்லை” என்றேன். “அவ்வாறெனில் நோன்பை விட்டுவிடுங்கள்” என்றார்கள்”[(3)].

**9. ஸபிய்யா பின்து ஹுயைய் (ரலி) :**

யூதர்களின் தலைவர்களுள் ஒருவனான ஹுயைய் பின் அக்தப் என்பவனின் புதல்வியே அன்னை ஸபிய்யா (ரலி). “நீர் ஒரு நபியின் (மூஸா (அலை) அவர்கள்) புதல்வி, உங்கள் சிற்றப்பாவும் ஒரு நபி (ஹாரூன் (அலை) அவர்கள்), நீர் தற்போது இருப்பதும் ஒரு நபிக்கு மனைவியாகத் தான்” என்று நபியவர்கள் இவர்களைப் பார்த்துக்

1. பார்க்க : பிக்ஹுஸ் ஸீரா பக்கம் : 473, 474.
2. அபூ தாவூத் (3931). அஷ்ஷெஹ் அல்பானீ அவர்கள் தனது “ஸஹீஹ் அபீ தாவூத்” என்ற நூலில் (ஹதீஸ் இல: 3372) இச்செய்தியை ஹஸன் எனக் கூறியுள்ளார்கள்.
3. புஹாரி (1986).

கூறியது இவர்களுடைய சிறப்பம்சங்களில் உள்ளது[1]. ஒரு கொடை வள்ளலாக இவர் மக்கள் மத்தியில் பிரபலமடைந்துள்ளார்கள். வணக்கம், பேணுதல், துறவறம், உபகாரம், கொடை அனைத்திலும் தலைசிறந்த பெண்களில் ஒருவராகத் திகழ்ந்தார்கள் என்று இமாம் இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்[2].

### 10. உம்மு ஹபீபா (ரலி) :

குரைஷிக் கோத்திரத்தின் உமைய்யா குடும்பத்தைச் சேர்ந்த அபூ ஸுப்யான் பின் ஹர்ப் (ரலி) அவர்களின் அன்புப் புதல்வி ரம்லா உம்மு ஹபீபா என்ற புனைப் பெயர் கொண்டு அழைக்கப் பட்டார்கள். நபியவர்களின் மனைவியரில் இவர்கள்தான் மிக நெருங்கிய உறவினராக இருந்தார்கள். (இஸ்லாத்தின் ஆரம்பத்தில்) தனது கணவருடன் ஹபஷாவுக்கு ஹிஜ்ரத் சென்றது இவர்களுடைய சிறப்புக்களில் உள்ளது. இவ்வாறு ஹபஷாவுக்கு ஹிஜ்ரத் சென்றோரைப் பார்த்து நபியவர்கள் “கப்பலில் பயணஞ் செய்தவர்களே உங்களுக்கு இரண்டு ஹிஜ்ரத்துக்கள் உள்ளன” என்றார்கள்[3]. நபியவர்களிடமிருந்து நிறைய நபிமொழிகள் அறிவித்துள்ளார்கள். “உம்மு ஹபீபா (ரலி) அவர்கள் நபியவர்களின் தலைசிறந்த மனைவியரில் ஒருவராகவும், வணக்கம் மற்றும் பேணுதலுள்ளவர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார்கள் என இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்[4].

### 11. மைமூனா பின்துல் ஹாரிஸ் (ரலி) :

பனூ ஹிலால் குடும்பத்தைச் சேர்ந்த இவர்கள் அன்னை ஸைனப் பின்து கு.ஃஸைமா (ரலி) அவர்களின் தாய்வழிச் சகோதரியாவார். நபியவர்களிடமிருந்து அதிகமான ஹதீஸ்கள் அறிவித்துள்ளார்கள். இவர்களைப் பற்றி அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் : “எங்களில்

---

1. திர்மிதீ : 3894). அஷ்ஷைஹ் அல்பானீ அவர்கள் தனது “ஸஹீஹ் ஸுனன் திர்மிதீ” என்ற நூலில் (ஹதீஸ் இல: 3055) இச்செய்தியை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள்.
2. அல்பிதாயா பாகம் : 11, பக்கம் : 225.
3. புஹாரி 3876, முஸ்லிம் 2502.
4. பார்க்க : அல்பிதாயா பாகம் : 11, பக்கம் : 166, சுருக்கமாக.

அதிக இறைபக்தியுள்ளவராகவும், உறவுகளைச் சேர்ந்து நடப்பவராகவும் இருந்தார்கள்" என்று கூறியுள்ளார்கள்[1]. நபியவர்கள் வாழ்கை நடத்திய மனைவியருள் இவரையே இறுதியாத் திருமணம் செய்தார்கள்.

இமாம் இப்னுல் கைய்யிம் (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள் : நபியவர்கள் மரணிக்கும் போது ஒன்பது மனைவிமார்கள் இருந்தார்கள் என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. அவர்களில் எட்டுப் பேர்களிடத்தில் இரவில் தவணை முறைப்படி தங்குவார்கள். ஆஇஷா, ஹப்ஸா, ஸைனப் பின்து ஜஹ்ஷ், உம்மு ஸலமா, ஸபிய்யா, உம்மு ஹபீபா, மைமூனா, ஸௌதா, ஜுவைரியா ஆகியோரே அவர்கள். நபியவர்களுக்குப் பின் முதலில் மரணித்தது அன்னை ஸைனப் பின்து ஜஹ்ஷ் (ஹி.20) அவர்களாவார். இறுதியாக மரணித்தவர் உம்மு ஸலமா அவர்களாவார். யஸீத் பின் முஆவியாவின் ஆட்சிக்காலத்தில் ஹி.62ல் மரணித்தார்கள்[2]. அல்லாஹ் அனைவரையும் பொருந்திக் கொள்வானாக.

**எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே!**

1. ஹாகிம் 6878, தபகாதுல் குப்ரா பாகம்: 8, பக்கம் 138.
2. ஸாதுல் மஆத் பாகம் 1, பக்கம் 130.